RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# சுழலில் மிதக்கும் தீபங்களில் பெண்கள்

**சு. சிநேகா [அ], கி. புவனேஸ்வரி [அ]**

[அ] முதுகலைத் தமிழியல் மற்றும் உயர்வுத்துறை, செல்லம்மாள் மகளிர் கல்லூரி, கிண்டி, சென்னை-600032 இந்தியா,

# Women in 'Suzhalil Mithakum Deepangal'

**S. Sneha [a], K. Bhuvaneswari [a]**

[a] PG Tamil and Research Department, Chellammal Women's College, Guindy, Chennai - 600032. India

*Corresponding Author:

Received: 09-12-2025
Revised: 01-03-2026
Accepted: 15-03-2026
Published: 17-03-2026

Check for updates

**ABSTRACT**

Rajamkrishnan, a prominent Tamil social thinker and critic, conceptualizes feminism not merely as an issue concerning individual women but as a foundational framework for comprehensive social transformation. In his perspective, feminism extends beyond women's rights claims and functions as an ideological movement aimed at restructuring the existing systems of power, class, caste, and culture within society. This study examines the feminist theories articulated by S. Rajamkrishnan from a sociological perspective. It highlights his argument that women's oppression is not a natural condition but a construct shaped by historical and social formations. The study further explores his critique of social institutions such as the family, marriage, religion, literature, and language, which he identifies as mechanisms that sustain and regulate women's subordination. By situating feminism within broader social structures, this research underscores Rajamkrishnan's contribution to feminist thought as a transformative and inclusive social discourse.

**Keywords:** Feminism in Everyday Life–Religious Oppression–Excessive Economic and Domestic Burden–Female Resistance and Psychological Awareness.

## முன்னுரை

தமிழ் நவீன இலக்கியத்தில், பெண்ணியம் சமூக மாற்றத்திற்கான ஒரு முக்கியக் கருத்தியலாக வளர்ந்துள்ளது. பெண்களின் வாழ்க்கை, உரிமை மறுப்பு, சமூக அடக்குமுறை மற்றும் பாலின வேறுபாடு ஆகியவற்றை இலக்கியத்தின் வழியாக வெளிப்படுத்திய எழுத்தாளர்களில் ராஜம் கிருஷ்ணன் தனித்த இடம் பெறுகிறார். அவர் பெண்ணியத்தை மேற்கத்திய கோட்பாடுகளின் பிரதிபலிப்பாக அல்லாமல், தமிழ்ச் சமூகத்தின் வாழ்க்கை யதார்த்தங்களில் இருந்து உருவான சமூக அனுபவமாக அணுகுகிறார். அவரது படைப்புகள், பெண்களின் அன்றாட வாழ்வில் நிகழும் அடக்குமுறைகளைக் குடும்பம், பொருளாதாரம் மற்றும் சமூக அமைப்புகளின் பின்னணியில் வெளிப்படுத்துகின்றன.

ராஜம் கிருஷ்ணனின் எழுத்துகளில், பெண் ஒரு இரக்கத்திற்குரிய பாத்திரமாக அல்லாமல் சமூகக் கட்டுப்பாடுகளை உணர்ந்து கேள்வி எழுப்பும் சிந்தனையாளராக உருவெடுக்கிறாள். வெளிப்படையான புரட்சியை முன்னிறுத்தாமல், உளவியல் விழிப்புணர்வு மற்றும் மௌன எதிர்ப்பு ஆகியவற்றின் வழியே சமூக நோக்கில் பெண்ணியத்தை அவர் முன்வைக்கிறார். இவ்வாய்வு, ராஜம் கிருஷ்ணன் பார்வையில் பெண்ணியம் எவ்வாறு சமூக யதார்த்தத்தின் பிரதிபலிப்பாகவும், சமூக மாற்றத்திற்கான விதையாகவும் அமைகிறது என்பதை ஆராய்வதே நோக்கமாகக் கொண்டுள்ளது.

## வாழ்வியல் பெண்ணியம்

பெண்ணியம் என்றாலே ஆண்களை எதிர்ப்பது என்ற தவறான கருத்து சமூகத்தில் பரவலாக நிலவி வருகிறது. உண்மையில் பெண்ணியத்தின் நோக்கம் அதுவன்று. காலம் காலமாக அடிமைப்பட்டு, வதைக்கப்பட்டு வாழும் பெண்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்டு, அவர்களுக்குக் கல்வியின் மூலம் விழிப்புணர்வை ஊட்டி, சமூகத்தில் ஆண்களுக்கு இணையான மதிப்பினைப் பெற்றுத் தருவதே பெண்ணியத்தின் நோக்கமும், செயல்பாடும் ஆகும். இந்த இலக்கை அடைய ஆண்கள் தடையாகும்போது மட்டுமே அவர்கள் எதிரிகளாகின்றனர். பெண்ணியம் என்பதைத் தத்துவம், இயக்கம், கோட்பாடு என்ற நிலைகளில் தனித்தனியாக ஆராய்ந்தால் அதன் முழு வளர்ச்சியையும் அறிந்துகொள்ள இயலும். பெண்ணியம் என்ற கோட்பாடானது, ஆண்கள் எந்த அளவு சமூக அமைப்பிலும், பொருளாதாரத்திலும், அரசியலிலும் ஈடுபட்டு உரிமை கொண்டாடுகிறார்களோ, அந்த அளவுக்குப் பெண்களுக்கும் அனைத்துத் துறைகளிலும் உரிமைகள் வழங்கப்பட வேண்டும், என்று கூறுவதோடு, அதன் அடிப்படையில் நன்கு வரையறுக்கப்பட்ட சமூக அமைப்பை உருவாக்கித் தரவும் முயல்கிறது. இந்த நிலையையும் ராஜம் கிருஷ்ணனின் நாவலில் காணமுடிகின்றது.

பெண்ணியம் என்ற தத்துவமானது, ஆண் மேலாதிக்கத்தின் வழி வழியாய் வந்த பண்பாட்டின் அடிப்படையில், பெண்கள் தனித்துவம் பெறாமல் வாழ்ந்து கொண்டிருப்பதையும், ஆண்களின் பாலியல் தேவையை நிறைவு செய்யும் பொருளாகத் தள்ளப்பட்ட விதத்தையும், ஆண்களைச் சார்ந்து, அவர்களின் நலன் பேணுவதையே வாழ்வாகக் கொண்டுள்ள நிலையையும் எடுத்துரைக்கின்றது. பெண்களின் இந்த நிலையை, "புருஷனாகப்பட்டவன், தூலமாகவும், சூக்குமமாகவும் அலைகடல் துரும்பாய் ஆக்கப்படும் பெண்ணுக்கு அடைக்கலம் என்று அவருள் பதிக்கப்பட்டிருக்கிறது. அடிப்பதும் அழுத்துவதும் அதிகாரம் செய்வதும் அவன் உரிமை, சேவிப்பதும், பூசிப்பதும், பாதுகாப்பதும் இவள் கடமை" (சுழலில் மிதக்கும் தீபங்கள்' - பக்.59) என்ற செய்தியை ராஜம் கிருஷ்ணன் அவர்கள் தனது புதினத்தில் எடுத்துரைக்கிறார்.

## சமயக் கொடுமை

இந்து மதமும் அதன் அடிப்படையிலான பண்பாடும் பெண்கள் பற்றி இருவேறு நிலைப்பாடுகளைக் கொண்டுள்ளன. பெண்களைத் தெய்வமாகப் போற்றும் கருத்தியல் நிலைப்பாடும், அதற்கு நேர்மாறாக அவர்களை அடிமைகளாக நோக்கும் நடப்பியல் நிலைப்பாடும் ஒருச்சேரக் காணப்படுகின்றன. இந்து சமயத்தில் பெண்ணுக்கென்று தனித்த இடமோ, இயக்கமோ இல்லை. அவள் இளமைப் பருவத்தில் தந்தையைச் சார்ந்தும், திருமணத்துக்குப்பின் கணவனைச் சார்ந்தும், கணவன் இறப்புக்குப்பின் மகனைச் சார்ந்தும் வாழ வேண்டியவள் என்பதே சமூகத்தால் கட்டமைக்கப்படுகிறது. குடும்ப நிகழ்வுகளிலும், சமுதாய நிகழ்வுகளிலும் ஆணிற்குப் பின்னே செயல்படுவதுதான் இந்து சமயத் தர்மமாகக் கற்பிக்கப்படுகின்றது. அத்துடன் பெண்ணுக்குத் தாய்மையும், இல்லற பொறுப்புகளுமே தலைசிறந்த பண்புகளாகவும் கடமைகளாகவும் கற்பிக்கப்படுகின்றன. சமூகத் தகுதியும் உடைய உயர் மத்தியதர வகுப்பைச் சார்ந்த ஓர் அந்தணப்பெண் அரித்துவாரில் துறவிக்குப் பாதபூசை செய்தபோது, அவரும் அதை மனப்பூர்வமாக ஏற்கிறார். அந்தப் பெண்ணும் அவள் கணவரும் சட்டத்திற்குப் புறம்பாகத் தவறான வழியில் பொருள் சேர்த்து அரசை ஏமாற்றி, சமூகத்தில் பெரிய மனிதர் வேடமிட்டு வாழ்வதால், துறவி இவர்களின் பூசை வழிபாட்டை ஏற்பதையே கதையின் நாயகியான கிரிஜா ஏற்க மறுக்கிறார்.

"பொருளாதாரத்தில் உயர்ந்தவரிடம் காட்டும் அன்பை, பரிவை ஏழை எளிய மக்களிடமும், பெண்களிடமும் துறவிகள் காட்டாததை கிரிஜா எதிர்க்கிறாள்." (சுழலில் மிதக்கும் தீபங்கள் பக்-157)

"துர்க்கைக்கு ராகு கால அர்ச்சனை பண்றேன். ஆடிமாசம் வெள்ளிக்கிழமையில் நீ வந்து ஒரு வெள்ளியிலானும் எலுமிச்சம்பழ விளக்கேற்றிவை. சுவாமிகளே சொல்லியிருக்கிறார். வர தைக்குள்ள கல்யாணம் ஆகும்னு. அந்தச் சூழலில், அந்தப் பராமரிப்பில், அந்த நம்பிக்கை போஷாக்கில் இவளுக்கு அறிவு பூர்வமான சிந்தனை எப்படி உதிக்கும்?"

## அதிக பணிச்சுமை

அறிவியல் முதல் அரசியல் வரை நாட்டின் முன்னேற்றத்தில் பெண்களின் பங்கு குறிப்பிடத்தக்கதாக உள்ளது. குடும்பப் பொறுப்பு முதல் சமூகப் பொறுப்புவரை பெண்கள் எண்ணற்ற சாதனைகளைப் புரிந்து வருகின்றனர். வீட்டின் நலத்தோடு, நாட்டின் நலத்துக்கும் தொண்டு செய்து வருகின்றார்கள். குடும்பம் என்ற அமைப்பு, மனிதர் நாகரிகப் பரிணாமம் பெற்றதே மிக முக்கியமானதாக கருதப்படுகிறது. இந்தியச் சூழலில் பெண் இன்னமும் குடும்ப அமைப்பை இழுத்துப் பிடித்துக் கொண்டு இருக்கிறாள். இவள் பொருளாதார உற்பத்தியை ஏற்று, வரதட்சணைக்கும்

தலைகுனிந்து, சமையல், வீட்டு நிர்வாகம், குழந்தைகளை வளர்த்தல் என்ற பொறுப்போடு, கணவனை நல்வழிப்படுத்தவும் தன் நலங்கள் அனைத்தையும் தியாகம் செய்கிறாள்.

“வரிசையாக எட்டுக் குழந்தைகளுக்குத் தாய். புரோகிதப் பரம்பரையில் வந்து ‘சரஸ்வதியின் பார்வையை எந்த வகையிலும் பெறாமல், வெறும் தீனிப் பட்டறையாக வயிறு வளர்த்து, அதன் காரணமாக நோயிலே வீழ்ந்த தந்தை, அவனுடன் எட்டுக் குழந்தைகளையும் காப்பாற்ற, கல்லுரலைக் கட்டி இழுத்து, அப்பளக் குழவியை ஓட்டி இரும்புலக்கைப் பிடித்து, தன்னைக் கரைத்துக் கொண்டிருந்த அந்த அன்னை-கிரிஜாவுக்கு அவ்வப்போது வந்து உதவுவா” (சுழலில் மிதக்கும் தீபங்கள் பக்-49) என்று பெண்களின் அதிகப்படியான பணிச்சுமையைப் பட்டியலிட்டுக் காட்டுகிறார் ராஜம்கிருஷ்ணன். இம்மாதிரியான உழைப்புகளுக்கு ஊதியம் இல்லாமலேயே குடும்பத்தில் பெண் உழைக்கிறாள். (சுழலில் மிதக்கும் தீபங்கள் பக்-38).

## பெண் எதிர்ப்பு (ம) உளவியல் விழிப்புணர்வும்:

பெண் எதிர்ப்பு என்பது பெண்களைப் பற்றிய எதிர்மறையான எண்ணங்கள், தவறான நம்பிக்கைகள் மற்றும் அணுகுமுறைகளைக் குறிக்கிறது. இது ஒருவரின் மனநிலையில் உருவாகி, அவர்களின் பேச்சு, நடத்தை, முடிவுகள் மற்றும் சமூக உறவுகளில் வெளிப்படுகிறது. பெண் எதிர்ப்பைக் குறைப்பதில் உளவியல் விழிப்புணர்வு மிக முக்கிய பங்கு வகிக்கிறது. இது பெண்களின் தன்னம்பிக்கை, மனநலம் மற்றும் சமூக முன்னேற்றத்தைப் பாதுகாக்க உதவுவதோடு, சமத்துவமான சமூகத்தை உருவாக்கும் அடித்தளமாக அமைகிறது. பெண் எதிர்ப்பு, ஒரு மனநிலை சார்ந்த சமூகப் பிரச்சினை. அதை மாற்ற உளவியல் விழிப்புணர்வு அவசியம். எண்ணங்களில் மாற்றம் வந்தாலே, நடத்தை மற்றும் சமூக அமைப்புகளில் நேர்மறையான மாற்றம் ஏற்படும். “பெண்ணுரிமைக் கோணத்தில் இப்பிரச்னைகள் சமூகத்தில் எவ்வாறு ஆழ்ந்து போய் அவளைப் பாதிக்கிறதென்று ஆசிரியை பல நிரூபணங்களுடன் விவாதிக்கிறாள் என்பதை மாதிரி அங்கும் இங்குமாகப் பார்த்துப் புரிந்துக்கொள்கிறாள்” (சுழலில் மிதக்கும் தீபங்கள் பக்.108).

## முடிவுரை

ராஜம்கிருஷ்ணன் பார்வையில் பெண்ணியம் என்பது தனிப்பட்ட பெண்களின் விடுதலைக்காக மட்டுமல்ல; அது சமூகத்தின் ஒட்டுமொத்த மனிதநேய மறுசீரமைப்பிற்காகத் திகழ்கிறது. ஆண், பெண் என்ற இரு பிரிவுகளைக் கடந்து, அதிகாரம், மொழி, பண்பாடு, வரலாறு ஆகியவை உருவாக்கிய அநீதி கட்டமைப்புகளை விமர்சித்து, சமத்துவத்தை மையமாகக் கொண்ட சமூக மாற்றத்தையே அவர் வலியுறுத்துகிறார். பெண்களின் அனுபவங்கள் இலக்கியத்திலும் சமூக வாழ்விலும் ஒதுக்கப்பட்ட விதத்தை வெளிச்சம் போட்டு, அவற்றை மையப்படுத்துவதன் மூலம் சமூக உண்மைகளை நேர்மையாக எதிர்கொள்ளச் செய்கிறார். இதனால், அவரது பெண்ணியச் சிந்தனை எதிர்ப்பின் மொழியாக மட்டும் இல்லாமல், உரையாடல், புரிதல் மற்றும் மாற்றத்திற்கான சாத்தியங்களை உருவாக்கும் மனிதநேயக் கண்ணோட்டமாக உயர்கிறது. எனவே, ராஜம்கிருஷ்ணனின் சமூக நோக்கில் பெண்ணியம் என்பது சமத்துவம், நீதிமுறை மற்றும் மரியாதை ஆகிய மதிப்புகளால் வடிவெடுக்கப்படும் ஒரு முழுமையான சமூகக் கனவாகத் திகழ்கிறது.

## References

Rajamkrishnan, (1994) Suzhalil Mithakum Deepangal, Dhagam Publications.

Rajamkrishnan, (1953) Penkural, Kalaimagal Magazine,

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License